ரோல்ஸ் ராய்ஸ் | ஊடக தகவல்

தீர்க்கதரிசனம் நிறைவேறியது
வாக்குறுதி காப்பாற்றப்பட்டது
குறிப்பிடத்தக்க பணி நடந்து கொண்டிருக்கிறது

முழுமையான முதல் மின்சார கார்:
ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் அறிவிப்பு

29 செப்டம்பர்

- முற்றிலும் புதிய, முழு மின்சார ரோல்ஸ் ராய்ஸ் காரின் உலகளாவிய, சாலை சோதனைத் திட்டத்தை தொடங்குவதாக அறிவித்தார் இந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-எட்விஸ்
- முழுமை பெற்ற தயாரிப்பை 2023-ம் ஆண்டின் 4வது காலாண்டில் வெளியிட திட்டம்
- 'ஸ்பெக்டர்' என்னும் பெயர் உலகத்தின் சூழலை பிரதிபலிக்கிறது
- நிறுவனர் சார்லஸ் ரோல்ஸின் 1900ஆம் ஆண்டின் தீர்க்கதரிசனத்தை பூர்த்தி செய்யும் மின்சார ரோல்ஸ் ராய்ஸ் கார்
- அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மின்சார காரை சந்தைக்கு கொண்டு வருவதாக உறுதியளித்த தலைமை நிர்வாக அதிகாரி
- உலகளாவிய சோதனை 2.5 மில்லியன் மைல்களை உள்ளடக்கியதாக இருக்கும் - 400 வருட பயன்பாட்டை உருவகப்படுத்தும்
- 2030ம் ஆண்டுக்குள் அனைத்து ரோல்ஸ் ராய்ஸ் தயாரிப்புகளும் முழுமையான மின்சாரமாக மயமானதாக இருக்கும்

முற்றிலும் மின்சார மயமாக்கப்பட்ட மோட்டார் கார்களை சாலைகளில் சோதனை ஓட்டத்திற்கு உடனடியாக கொண்டு வருவதாக வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனம் இன்று வெளியிட்டது. முக்கியமான தருணத்தில் இதை நான் அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்று ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-எட்விஸ் தெரிவித்தார்.
இது குறித்து அவர் கூறியதாவது:-
மே 4, 1904 ஆண்டு துவங்கிய ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார் நிறுவனத்தின் வரலாற்றில் இன்று மிக முக்கியமான நாள் ஆகும். அன்றைய தினம், எங்கள் நிறுவனர்களான சார்லஸ் ரோல்ஸ் மற்றும் சர் ஹென்றி ராய்ஸ் ஆகியோர் முதலில் சந்தித்து, 'உலகின் சிறந்த மோட்டார் காரை உருவாக்கப்போகிறோம்' என்று கூட்டாக தெரிவித்தனர்.
அந்த நேரத்தில் அவர்களுக்குக் கிடைத்த மிகவும் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அவர்களின் குறிப்பிடத்தக்க பொறியியல் திறமைகளை பயன்படுத்தி இந்த இரு முன்னோடிகளும் சத்தமில்லாத, அசௌகரியமான மற்றும் அடிப்படை போக்குவரத்து வழிமுறைகளிலிருந்து, ஆரம்பகால


The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL

உள் எரிப்பு எந்திர கார்களில் இருந்து முற்றிலும் வேறுபட்ட அளவுகோலை அமைத்து புதிய முறைக்கு மாறினார்கள்.

''அவர்கள் உருவாக்கிய கார்கள், ஒரு உண்மையான ஆடம்பர அனுபவத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அன்று முதல் இன்று வரை இந்த கார்கள் இதுவரை எந்தவிதமான போட்டியும் இன்றி இந்த துறையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் இன்று, 117 ஆண்டுகளுக்குப் பிறகு, ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் ஒரு அசாதாரண புதிய தயாரிப்புக்கான சாலை சோதனை திட்டம் உலகளாவிய அனைத்து மின்சார கார் புரட்சியை உயர்த்தும் மற்றும் முதல் மற்றும் மிகச்சிறந்த-ஆடம்பரத்தை உருவாக்கும் என்பதை அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன். இது ஒரு முன்மாதிரியான செயல்பாடு இல்லை; இது ஒரு உண்மையான விஷயம் ஆகும். இது தெளிவான தொலைக்கு பார்வையுடன் பரிசோதிக்கப்பட்டு 2023-ம் ஆண்டின் நான்காவது காலாண்டில் இந்த கார் எங்கள் வாடிக்கையாளர்களின் பயன்பாட்டிற்கு வரும்''.

இது குறித்து டார்ஸ்டன் முல்லர்-எட்விஸ் மேலும் கூறுகையில்,

தீர்க்கதரிசனம் நிறைவேறியது

"மின்சார மோட்டார்கள் பயன்பாடு என்பது ரோல்ஸ் ராய்சுக்கு புதிதான ஒன்று அல்ல. சர் ஹென்றி ராய்ஸ் மின்மயமாக்கப்பட்ட அனைத்து பொருட்கள் மீதும் அதிக ஆர்வம் காட்டியதோடு, அவரது முதல் முயற்சியாக துவக்கப்பட்ட எப்.எச். ராய்ஸ் அன்ட் கம்பெனி, டைனமோ, மின்சார கிரேன் மோட்டார்கள் ஆகியவற்றை தயாரித்ததோடு பயோனெட் என்னும் தொழில்நுட்பத்தை விளக்குகளில் பொருத்தி அதற்கான காப்புரிமையையும் பெற்றது".

இருப்பினும், சார்லஸ் ரோல்ஸ் தான் தயாரித்த வாகனங்களுக்கான மின்மயமாக்கப்பட்ட எதிர்காலத்தை உண்மையாக கணித்தார். 1900ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவர் கொலம்பியா என்ற ஆரம்ப மின்சார மோட்டார் பொருத்திய காரை பயன்படுத்தியதோடு அதன் மின்சார செயல்பாடு சிறந்ததாக இருப்பதாக அறிவித்தார்.

"மின்சார கார்கள் முற்றிலும் சத்தமில்லாதது மற்றும் மிகவும் தூய்மையானது. அதில் எந்தவிதமான வாசனையும் அதிர்வும் இருக்காது. அதற்கான சார்ஜிங் நிலையங்களை நிறுவினால் அவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் இப்போதைக்கு, அது சாத்தியமாகுமா என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. அதற்கு குறைந்தபட்சம் பல வருடங்களுக்கு மேல் ஆகும்'' என்று கூறினார்.

"குட்வுட் சகாப்தத்தில் சார்லஸ் ரோல்சின் தீர்க்கதரிசனம் தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டது. ஆனால் கிடைக்கக்கூடிய தொழில்நுட்பமானது ரோல்ஸ் ராய்சின் சிறப்புமிக்க அனுபவத்திற்கு உதவியாக இருக்கிறதா என்பதை பார்க்கையில் அதில் நாங்கள் இன்று வரை திருப்தி அடையவில்லை''.

"இருப்பினும் ஆடம்பரத்தின் எதிர்கால போக்கை மாற்ற வேண்டிய தருணம் இது ஆகும்''.

''ஒரு பெரிய சாதகமான சூழல்போக்குடன் இந்த தைரியமிக்க புதிய எதிர்காலத்தை நாங்கள் தொடங்குகிறோம். மற்ற எந்த வாகன பிராண்டையும் விட மின்சார இயக்கம் என்பது ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்களுக்கு மிகவும் பொருத்தமானது ஆகும். இது எந்தவித சத்தம் இல்லாமலும், செம்மைப்படுத்தப்பட்டு மற்றும் அதன் அனைத்து முறுக்குவிசையையும் கிட்டத்தட்ட உடனடியாக உருவாக்கி, மிகப்பெரிய சக்தியை உருவாக்குகிறது. இதைத்தான் ரோல்ஸ் ராய்சில் நாம் 'வாப்டபிலிட்டி' என்று அழைக்கிறோம்''.


Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL

“ரோல்ஸ் ராய்சில், நாங்கள் சில காலமாக மின்சார பவர்டிரெயின் பரிசோதனையை செய்து வருகிறோம். 2011ஆம் ஆண்டு நாங்கள் 102EX, என்னும் முழுமையாக மின்சாரத்தில் செயல்படும் கற்பனை காரை அறிமுகம் செய்தோம். அதனைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டு வெளியான 103EX கார் நமது எதிர்காலத்திற்கான நமது பார்வையை பிரதிபலிக்கிறது”.

வாக்குறுதி காப்பாற்றப்பட்டது

“இந்த அசாதாரண தயாரிப்புகள் எங்கள் வாடிக்கையாளர்களிடையே மின்சார பவர்டிரெயின் தொழில்நுட்பத்தின் மீதான ஆர்வத்தை பெரிய அளவில் தூண்டியது. ரோல்ஸ் ராய்சுக்கு இது சரியான பொருத்தம் என்று அவர்கள் கருதினர். மேலும், கடந்த பல ஆண்டுகளாக, ‘ரோல்ஸ் ராய்ஸ் எப்போது மின்சார செயல்பாட்டிற்கு மாறும்?’ மற்றும் ‘நீங்கள் எப்போது உங்கள் முதல் மின்சார காரை உற்பத்தி செய்வீர்கள்?’ என்று என்னிடம் மீண்டும் மீண்டும் கேள்விகள் கேட்கப்பட்டது”.
“அதற்கு நான் தெளிவற்ற வாக்குறுதியுடன் ‘வரும் 10 ஆண்டுகளுக்குள் ரோல்ஸ்-ராய்ஸ் மின்சார காராக மாறும் என்று பதிலளித்தேன்’. இன்று அந்த வார்த்தையை நான் காப்பாற்றி உள்ளேன்.”

மறுஉருவாக்கம்

“சார்லஸ் ரோல்சின் தீர்க்கதரிசனமும் எனது வாக்குறுதியும் எங்களை குறிப்பிடத்தக்க மாடல் காரை தயாரிக்கும் ஒரு முக்கிய தருணத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறது. ரோல்ஸ் ராய்ஸ் ஒரு வரலாற்று மற்றும் தனித்துவமான முயற்சியில் இறங்கியுள்ளது, அது இன்று உண்மையாகிறது. இதை கொண்டு வருவதற்காக எங்கள் வடிவமைப்பாளர்களும் என்ஜினியர்களும் கடுமையாக பணியாற்றி உள்ளனர். ரோல்ஸ் ராய்சின் வரலாற்றில் முழுமையான மின்சார காரை சாலையில் பரிசோதிக்க நாங்கள் தற்போது தயாராகி விட்டோம்.
“இந்த காரை விரும்பும் ஒவ்வொருவருக்கும் மற்றும் எங்கள் வாடிக்கையாளர் களுக்கும் இதை வழங்கும் முன் எங்களின் இந்த மின்சார தொழில்நுட்ப அடிப்படையிலான மாற்றத்தில் உள்ள ஒவ்வொரு அம்சத்திற்கான சவால்களையும் நாங்கள் தீர்க்க வேண்டும்”.
“இதைச் செய்ய, அதற்கான சோதனைத் திட்டத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். 2.5 மில்லியன் கிலோ மீட்டர் இந்த சோதனை ஓட்டம் செய்யப்பட உள்ளது. சராசரியாக 400 ஆண்டுகளுக்கும் மேலான பயன்பாட்டின் உருவகப்படுத்துதலாக இது இருக்கும். இந்த புதிய மோட்டார் காரை வரம்பிற்குள் கொண்டுவர உலகின் நான்கு மூலைகளுக்கும் பயணம் செய்ய உள்ளோம்”.
“உலகெங்கிலும் உள்ள சாலைகளில் இந்த சோதனை காரை நீங்கள் பார்ப்பீர்கள். அது நிச்சயம் உங்கள் கண் முன்னே இருக்கும். அது பல மில்லியன் மைல் பயணத்தில் அனைத்து நிலைகளிலும் எல்லா நிலப்பரப்புகளிலும் பரிசோதிக்கப்படும். இந்த சோதனையானது ரோல்ஸ் ராய்ஸ் கார் தயாரிப்பை எதிர்காலத்தில் துரிதப்படுத்தும்”.

உண்மையிலேயே நெகிழ்வுத்தன்மை மிக்க எங்களின் சொந்த கட்டமைப்பு

கடந்த 2017-ம் ஆண்டில், நாங்கள் பாண்டம் காரை அறிமுகப்படுத்தினோம், அது குறிப்பிடத்தக்க மாடல் காராக பிரத்யேகமான அலுமினியத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டது ஆகும். இதேபோல் வரவிருக்கும் அனைத்து ரோல்ஸ் ராய்ஸ் கார்களும் அதிக இடவசதியோடு மிகுந்த நெகிழ்வுத்தன்மையுடன் இருக்கும்.


The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL

இந்த பிரத்யேக தொழில்நுட்பமானது ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தால் ரோல்ஸ் ராய்ஸ் கார்களுக்காகவே உருவாக்கம் செய்யப்பட்டதாகும். இவை இந்த கார்களுக்காவே பிரத்யேகமாக பயன்படுத்தப்படுகிறது. தற்போது உள்ள கல்லினன் மற்றும் கோஸ்ட் போன்ற பல்வேறு உள் எரிப்பு எந்திர மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட கார்களுக்காகவே இது உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த மாடல் மின்சார கார்களில் முற்றிலும் மாறுபடும்.

இந்த நிலையில் வரவிருக்கும் மின்சார கார்கள் ரோல்ஸ் ராய்சின் சொந்த கட்டமைப்பின் மூலமே உருவாக்கப்பட உள்ளது. எனவே ரோல்ஸ் ராய்சின் அசாதாரண அனுபவத்தை சாலையில் அனுபவிக்க முடியும். எந்தவொரு குழு இயங்குதள பகிர்வு உத்தியும் இல்லாமல், மின்சார காருக்கான எங்கள் திட்டங்களை கட்டமைப்பின் ஆரம்ப வடிவமைப்புடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தி உள்ளோம். இதன் காரணமாக இந்த அசாதாரண புதிய தயாரிப்பு வாடிக்கையாளர்களின் உயர்தர எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும்.

புதிய பெயர்: புதிய நெறிமுறை

"'இந்த ரோல்ஸ் ராய்ஸ் கார் ஒரு தீர்க்கதரிசனத்தின் வெளிப்பாடாகும். மேலும் ஒரு தனித்துவமான முயற்சியில் நாம் இறங்கும்போது அதற்கான வாக்குறுதியை இது குறிக்கிறது. இது எங்கள் பிராண்டுக்கான புதிய பாரம்பரியத்தின் ஆரம்பம் ஆகும். அந்த உற்சாகத்தில், இந்த காருக்கு முற்றிலும் புதிய பெயரை முடிவு செய்துள்ளோம். கடந்த நூற்றாண்டில் எங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பை பெற்றுத் தந்த பெயர்களைப் போல சக்திவாய்ந்த மற்றும் உற்சாகமூட்டும் ஒரு பெயராக அதாவது பேண்டம், கோஸ்ட் மற்றும் ரெய்த் போன்று இருக்கும். "இது எங்கள் தயாரிப்புகளின் எதேச்சையான மற்றும் பிற உலக சூழலுக்கு சரியாக பொருந்தும் ஒரு பெயராக இருக்கும். இந்த தருணத்திற்காக நாங்கள் குறிப்பாக ஸ்பெக்டர் என்று பெயரிட்டுள்ளோம்''.

ஸ்பெக்டர் என்பது மாபெரும் சக்தி மற்றும் மனிதர்களைப் போல மாயத் தோற்றத்தில் பேய் அல்லது ஆவிக்கு வழங்கப்படும் பெயர் ஆகும்; இவை தங்களின் விரைவான வெளிப்பாடு மூலம் தங்கள் இருப்பை உணர்த்தும் மாற்று சாம்ராஜ்யம் ஆகும். பேயானது உலக செயல்பாடுகளை இடைநிறுத்த முயற்சிக்கிறது. அது ஆக்கிரமிக்கும் இடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. அது தோன்றியவுடன், வேகமாக கலைந்து, உற்சாகம், ஆற்றல் மற்றும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. இந்த பெயர் இன்று நாம் அறிவிக்கும் அசாதாரண ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு பொருத்தமானதாக இருக்கும். மிகச்சிறந்த இங்கிலாந்து பிராண்டான எங்கள் காருக்கு நாங்கள் இங்கிலாந்து வார்த்தையை தேர்வு செய்துள்ளோம். இருப்பினும் அதன் பொருள் உலகளாவியது ஆகும்.

அசாதாரணமான எதிர்காலம்

"இந்த புதிய தயாரிப்பின் மூலம் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் எங்கள் முழு தயாரிப்புகளையும் முழுமையான மின்மயமாக்கலுக்கு தயாராகி விட்டோம். இந்த காலக்கட்டத்தில், ரோல்ஸ் ராய்ஸ் இனி எந்த உள் எரிப்பு எந்திர தயாரிப்புகளையும் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபடாது''.

ROLLS-ROYCE
MOTOR CARS

The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com

Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL

“ஸ்பெக்டர் என்பது சார்லஸ் ரோல்சின் தீர்க்கதரிசன வாழ்க்கையின் நிறைவாகும். ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார் நிறுவனம் சார்பில் செய்யப்பட்ட எனது வாக்குறுதி காப்பாற்றப்பட்டுள்ளது. இப்போது நாம் ஒரு குறிப்பிடத்தக்க வேலையைத் தொடங்குகிறோம். உலகின் மிக முற்போக்கான மற்றும் செல்வாக்குள்ள பெண்களையும் ஆண்களையும் ஒரு சிறந்த, மின்மயமாக்கப்பட்ட எதிர்காலத்திற்கு நாம் அழைத்துச் செல்ல இருக்கிறோம் என்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்”.
இவ்வாறு ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி டார்ஸ்டன் முல்லர்-எட்விஸ் தெரிவித்தார்.

மேலும் தகவல்களுக்கு
இது குறித்து மேலும் தகவல்களை அறிந்து கொள்ள நீங்கள் எங்களின் பத்திரிக்கை செய்தியை பார்க்கலாம். மேலும் உயர்தரமிக்க படங்கள் மற்றும் வீடியோவை பார்க்க அதன் இணையதளத்தை பார்க்கவும்.

மேலும் இது குறித்த தகவல்களை நீங்கள் சமூக வலைதளங்களான : LinkedIn; YouTube; Twitter; Instagram; மற்றும் Facebook போன்றவற்றிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

இந்த இணைப்பில் பி-ரோல், குறைந்த மற்றும் உயர்-தெளிவுத்திறன் கொண்ட படங்களைக் கண்டறியவும்: https://bit.ly/3AjwWts

ஆசிரியர்களுக்கான குறிப்பு
ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனம் பிஎம்டபிள்யூ குழுமத்திற்கு சொந்தமான முழு துணை நிறுவனமாகும், இது விமான எந்திரங்கள் மற்றும் உந்துவிசை அமைப்புகள் தயாரிக்கும் ரோல்ஸ் ராய்ஸ் பிஎல்சி நிறுவனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் கார்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் வெஸ்ட் சசெக்ஸில் உள்ள குட்வுட் உற்பத்தி ஆலை ஆகியவற்றில் 2,000க்கும் மேற்பட்ட திறமையான ஆண் மற்றும் பெண் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.


The Drive, Westhampnett, Chichester, PO18 0SH, UK +44 (0)1243 384000 enquiries@rolls-roycemotorcars.com www.rolls-roycemotorcars.com
Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL

தொடர்பு விவரம்| பிராந்திய அளவில்

| | | |
|---|---|---|
| மைக்கேல் சான் | +65 8321 7041 | michelle.chan@rrmcapac.com |
| ஷெரில் கெஸியா | +61 435 779 950 | sheryl.kezia@rrmcapac.com |
| வேரா சென் | +65 9816 2480 | vera.chen@rrmcapac.com |
| லிம் ஷென் யீ | +60 12 218 9015 | shen.yee@rrmcapac.com |
| இவோன் பிரிகிட்டே | +62 819 0635 2975 | yvonne.b@rrmcapac.com |
| சோலி புய் | +84 38 771 7442 | chloe@rrmcapac.com |
| சுடினுன் குலா-திலகா | +66 61 956 2939 | chutinun@imageimpact.co.th |
| ஹல் செருதின் | +65 6838 9675 | hal.serudin@rolls-roycemotorcars.com |
| உதவிப் பிரிவு | +65 9017 6272<br>+66 8307 66196 | info@rrmcapac.com |




Rolls-Royce Motor Cars Limited. Registered in England and Wales. Company number 3522604. Registered address: Summit ONE, Summit Avenue, Farnborough, Hampshire, GU14 0FB.
Rolls-Royce Motor Cars Ltd is authorised and regulated by the Financial Conduct Authority in relation to its credit broking activities in the UK
CONFIDENTIAL